**Judicial Form No.**53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII**, **Cr.P.C.**)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SULUR.**

Calendars
Miscellaneous
Preliminary Register
Sessions
} Case No. CC 50 of 2025

Depositions of PW - 3 witness for ________ { Prosecution / Defence / Court

Name : மோகன்குமார்

Father's Name : குருசாமி

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 15th **day of April** 2026.

**(1 வது எதிரி ஆஜர். 2 வது எதிரி ஆஜர் இல்லை. 2 வது எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜராகி பாகுபாச பிரிவு 355 ன் படி மனு தாக்கல் செய்துள்ளார். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

**அரசு தரப்பில் முதல்விசாரணை**

நான் தற்பொழுது கம்மாளப்பட்டியில் குடியிருந்து கொண்டு Catering தொழில் செய்து வருகிறேன். தேதி மாதம் மற்றும் வருடம் ஞாபகம் இல்லை, சுமார் 10 வருடங்களுக்கு முன்பாக நான் நெகமம் காவல்நிலையம் சென்றிருந்தேன். அப்பொழுது போலீசார் என்னிடம் கையொப்பம் செய்யுமாறு கேட்டார்கள். நானும் கையொப்பம் செய்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னால் செய்யப்பட்டவை தான். கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ.**3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக குறுக்கு விசாரணை மேற்கொள்ள நீதிமன்ற அனுமதி கோரப்பட்டு சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டு நீதிமன்ற அனுமதியுடன் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை)**

கடந்த 06.01.2015 ஆம் தேதி மாலை தங்கவேலு மற்றும் எதிரிகளுக்கிடையே பிரச்சனை ஏற்பட்டது என்றும், பிரச்சனை சம்பந்தமாக எதிரிகள் தங்கவேலுவை அடித்து காயம் ஏற்படுத்தினார்கள் என்றும், அது சம்பந்தமாக தங்கவேலு காவல் நிலையத்தில் கொடுத்த புகார் சம்பந்தமாக போலீசார் 08.01.2015 ஆம் தேதி சம்பவ இடம் வந்து சம்பவ இடத்தை என் முன்னிலையிலும், சாட்சி வேலுச்சாமி முன்னிலையிலும் பார்வையிட்டு போலீசார் பார்வை மகசர் மற்றும் மாதிரிவரைபடம் தயார் செய்தார்கள் என்றும், அதில் நாங்கள் இருவரும் சம்பவ இடத்தில் கையொப்பம் செய்ததாக போலீசார் விசாரணையின் பொழுது கூறிவிட்டு தற்பொழுது போலீசார் காவல் நிலையத்திற்கு நான் சென்ற பொழுது கையொப்பம் கேட்டதன் அடிப்படையில் கையொப்பம் செய்ததாக உண்மை சம்பவத்தை மறைத்து பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை

**Signature of Witness**

**Sd./-T.Arunkumar**
**Judicial Magistrate,**
**Sulur.**